1969 மார்ச் 22]

Touring Cinema Theatres.

399—*Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the security deposit payable by the touring cinema theatre owners has been increased ; and

(*b*) if so, the reasons thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பனியன்களுக்கு ஒருமுனை விற்பனை வரி

*400 வினா—**திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் உற்பத்தியாகும் பனியன்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதித்து அத் தொழிலை ஊக்குவிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. வேலுசாமி : ஐயா, திருப்பூரில் மிகக் குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான ஆட்களுக்கு வேலை கொடுக்கும் பனியன் தொழிலை ஊக்குவிக்க அதற்கு ஒரு முனை விற்பனை வரி விதித்தால் சரியாக இருக்கும் என்பது பலருடைய அபிப்பிராயமாக இருப்பதால், அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது ஏற்கனவே பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது மட்டுமல்லாமல், அவர்கள் வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்வதிலே இருக்கும் சில சிக்கல்களை நீக்கி மொத்தமாக காஸ்ட் அகவுண்ட்ஸ் மட்டும் வைத்துக் கொண்டால்கூடப் போதும் என்று சில விதிமுறை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது.

Pre-industrial training for repatriates

401—*Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the details of the pre-industrial training course offered to repatriates from other countries ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்பிய சிறுவர்கள் குறைந்த கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்து, தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினால், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 பயிற்சி உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்து விடுதிகளிலும் பிற உறைவிடங்களிலும் வசித்து வந்தால் தான் அப் பயிற்சி உதவிப் பணத்தைப் பெறுவர். மேலும் அவர்களது பெற்றோர்களின் வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்பட்டிருக்கக் கூடாது. பயிற்சி பெறும் சிறுவர்களின் பெற்றோருடைய வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மேற்படாதிருப்பின், அச் சிறுவர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி முறை ஒன்றுக்கு ரூ. 30 புத்தக மானியமும் வழங்கப்படும். இப் பயிற்சியின் கால அளவு 3 திங்கள் என்று முதற்கண் முடிவு செய்யப்பட் டிருந்தது. செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிபூண்டியில் 2—4—1968 முதல் அது நடத்தப்பட்டது. இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு கும்மிடிபூண்டி சிறப்புத் துணைக் கலெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டது. பன்னிரண்டு மாணவர் பயிற்சி பெற்றனர்.